சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப்பணி – கருணை அடிப்படை பணிநியமனம் – ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை – நீலகிரி மாவட்டம் – இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து 01.02.2001 முதல் காணாமல் போன அரசு ஊழியர் திரு.வி.மாணிக்கம் என்பவர் 01.02.2001 அன்று இறந்துவிட்டார் என நீலகிரி மாவட்டம், கூடலூர் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தால் 06.02.2015 அன்று சட்ட பூர்வமாக அறிவிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அவரது மகன் திரு.M.வடிவேலு என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (இ3) துறை

அரசாணை (2ப) எண்.49

நாள்: 10.07.2020
சார்வரி, ஆனி, 26
திருவள்ளுவர் ஆண்டு– 2051
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (2ப) எண்.146, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (இ3) துறை, நாள் 23.09.2019.
2. நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்முறை எண்.டி2/12432/2015, நாள் 24.10.2019.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், கடிதம் எண்.64987/2019/டி2, நாள் 07.02.2020.

*****

ஆணை:

நீலகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகு, கூடலூர் ஊராட்சி ஒன்றியத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து 01.02.2001 முதல் காணாமல் போன அரசு ஊழியர் திரு.வி.மாணிக்கம் என்பவர் 01.02.2001 அன்று இறந்துவிட்டார் என நீலகிரி மாவட்டம், கூடலூர் மாவட்ட முன்சீப் நீதிமன்றத்தால் 06.02.2015 அன்று சட்ட பூர்வமாக அறிவிக்கப்பட்ட நாளில் வாரிசுதாரர் திரு.M.வடிவேலு என்பவரின் வயது 35 ஆண்டுகள் 9 மாதங்கள் 7 நாட்கள் ஆகி விட்டதால், கருணை அடிப்படையில் பணிநியமனம் பெற மறைந்த அரசு ஊழியரின் மகன் / மகளின் அதிகபட்ச வயது 35 என நிர்ணயிக்கப்பட்டுள்ள அரசாணை (நிலை) எண்.9, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.19.01.1998 மற்றும் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016–ல் பிரிவு–58–ன் கீழ் ஆளுநர் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு–15 ஆகியவற்றைத் தனியர் பொருட்டு தளர்த்தி மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஆணையிடப்பட்டது. அதன்படி திரு.M.வடிவேலு என்பவருக்கு மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில், நீலகிரி மாவட்டத்தில் இளநிலை உதவியாளராகத் தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 01.11.2019 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருகிறார். மறைந்த உதவியாளர் தகுதிகாண் முடித்த பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் இருந்தது என்றும், அவரது மகன் திரு.M.வடிவேலு கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 31.10.2016 அன்று

விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 29.04.1979 என்றும், காணாமல் போன அரசு ஊழியர் இறந்து விட்டார் என சட்டபூர்வமாக அறிவிக்கப்பட்ட நாளான 6.2.2015 அன்று தனியரின் வயது 35 ஆண்டுகள் 9 மாதங்கள் 7 நாட்கள் என்றும், பணி நியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 37 என்றும் பணி நியமன நாளில் தனியரின் வயது 40 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்து, தனியரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 01.11.2019 முற்பகல் முதல் வரன்முறை செய்யக்கோரி மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு கருத்துரு அனுப்பியுள்ளார்.

2. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறை, நாள் 01.08.2018–ல் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணி வரன்முறை குறித்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

3. இந்நிலையில் மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கருத்துரு உரிய அசல் ஆவணங்களுடன் அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தின்படி, இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.M.வடிவேலு என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில், நீலகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 01.11.2019 முற்பகல் முதல் தனியரின் பணியினை அவர் அப்பணியிடத்திற்குரிய உடல் தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

4. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் 18.06.2020 ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்.7423/க்யூ–1/2020 மற்றும் பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்தத் துறையின் அலுவல் சாரா எண்.14820/ஜி2/2020, நாள் 20.06.2020–ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஹன்ஸ் ராஜ் வர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை–15.
மாவட்ட ஆட்சித் தலைவர், நீலகிரி மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை – 18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை–15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர், நீலகிரி மாவட்டம்.

நகல்:
திரு.M.வடிவேலு ,
இளநிலை உதவியாளர், ஊரக வளர்ச்சிப் பிரிவு,
நீலகிரி மாவட்டம். (வழி: நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர்.)
தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறை, சென்னை–9.
பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை , சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்

மே.மு.ந.க.அ2-12432/15

மாவட்ட ஆட்சியரகம்
(வளர்ச்சி பிரிவு)
உதகமண்டலம்.
நாள் - .09.2020

அரசாணை (நிலை) எண் 49, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (சி3) துறை. நாள்: 10-07.2020

அனுப்பப்படுகிறது

மாவட்ட ஆட்சியருக்காக
நேர்முக உதவியாளர் (ப.வ.)
உதகமண்டலம்

1/9/20 2/9/20

பெறுநர்

திரு M. வடிவேலு,
இளநிலை உதவியாளர்,
ஊராட்சி ஒன்றியம், கூடலூர்
(வழி- ஆணையாளர், ஊ.ஒ. கூடலூர்)

நகல்: ஆணையாளர், ஊராட்சி ஒன்றியம், கூடலூர்